பத்திரிக்கை செய்தி

இயற்கையாக தயாரிக்கப்படும் சோப் கம்பெனி நடத்த ரூ.25,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய மருந்து கட்டுபாட்டு இணை இயக்குநர் கைது

புகார்தாரர் திரு.சரவணன், உரிமையாளர், Our Green India Soap Factory, குடியாத்தம், வேலூர் மாவட்டம், தன்னுடைய நிறுவனத்தில் இயற்கையாக தயாரிக்கப்படும் சோப் தயார் செய்ய வேண்டி உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை, அண்ணாசாலை, சென்னையில் விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.கார்த்திகேயன், இணை இயக்குநர், மருந்து கட்டுப்பாடு, உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை, அண்ணாசாலை அவர்கள் தனக்கு ரூ.1,00,000/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். மேலும் ரூ.25,000/- முன் பணமாக கொடுத்தால் தான் உங்களுடைய கோப்பு பரிசீலனை செய்யப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 21.07.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.கார்த்திகேயன், இணை இயக்குநர், லஞ்ச பணம் ரூ.25,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.